# <u>வாக்குமூலம்</u>
## <u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
## <u>வழக்கு எண் : CC.No.161/2018</u>
## <u>வழக்கு சாட்சி PW-4</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 11.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர சந்திப்பு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்காசி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து போது காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் மாரிசெல்வி முதல் விசாரணை செய்த லில்லிபாய் ஆகியோர்கள் பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டார். அவருக்காகவும் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். நான்தான் மேல்விசாரணை அதிகாரி ஆவேன். 20.09.2017 ம் தேதி 20.00 மணிக்கு தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் செல்வி நிலைய பொறுப்பில் இருந்தபோது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று சௌந்திரவள்ளி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.462/2017 பிரிவு 279, 337, 304(A) இதச வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.2 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆகும்.

பின்னர் அந்த வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் லில்லிபாய் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.09.2017 ம் தேதி இரவு 20.15 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மாதவன், ரியாஸ்

ஆகியோர் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அசாஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் சாட்சிகள், சௌந்திரவள்ளி, சரபின், ராசாத்தி, சங்கரகுமாரசாமி, மாதவன், ரியாஸ் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் மாரிசெல்வி ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

20.09.2017 ம் தேதி காலை 8.00 மணிக்கு தென்காசி அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமைனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்துபோன நெல்லை என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அசாஆ.6** ஆகும். பின்னர் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக முதல் நிலை காவலர் ஆரோக்கியமேரி மூலமாக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

பின்னர் வழக்கில் சம்மந்தப்பட்ட TN 76 AA 9847 என்ற பதிவெண் கொண்ட பயணிகள் ஆட்டோவை விபத்து ஆய்வு செய்யவேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளார். அத்துடன் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் அந்த வழக்கு கோப்பினை நான் எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.09.2017 ம் தேதி வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் ஆனந்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அது **அசாஆ.7** ஆகும்.

பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அன்னபேபி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை சான்று **அசாஆ.8** ஆகும்.

பின்னர் காயம்பட்ட ராஜாத்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரோஸ்மேரி தனியார் மருத்துவமனை மருத்துவர் சுடலைமுத்து என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சிகிச்சை விவர சான்று பெற்றேன். அது அசாஆ.9 ஆகும். காயம்பட்ட சரபின், ராஜாத்தி,சௌந்திரசெல்வி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரஜினிகாந்த் அரசு மருத்துவமனை தென்காசி அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்றும், இறந்துபோன நெல்லை என்பவருக்கு விபத்து பதிவேட்டின் நகலை பெற்றேன். அவைகள் அசாஆ.10, அசாஆ.11, அசாஆ.12, அசாஆ.13 ஆகும்.

அத்துடன் எனது விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரி மீது சட்டப்பிரிவு 279, 337, 304(A) IPC வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரியின் அஜாக்கிரதையினாலும், கவனக்குறைவினாலும் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அசா.1 கொடுத்த தவறான தகவலின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து சாட்சிகளை சரிவர விசாரணைசெய்யாமல் ஒரு தலைப்பட்சமாக விசாரித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:29:46 +0530